**தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்ததாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது செயற்படுத்தியிருந்ததாக.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு மாவட்டச் செயலாளரின் DIST.CMB/AD/3/11/2017 ஆம் இலக்க மற்றும் 2020 செப்டம்பர் 09 ஆந் திகதிய கடிதம் மூலம் நிலமதுர கட்டிடத்தை நிர்மாணித்த அரச நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட மாடிகளின் எண்ணிக்கையின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மின்சாரச் செலவுகளின் பெறுமதி ரூபா 46,427,926 என்பதுடன் அதன் பிரகாம் மின்சார சதவீதமான மின்சாரப் பட்டியலை அறவிடுவதற்கு அறிவுறுத்தல் மற்றும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. | மாவட்டச் செயலக ''நிலமதுர'' கட்டிட மாடிகள் 19 மொத்தமாகக் காணப்படுவதுடன் முழுக் கட்டிடத்திற்காக வழங்கப்படுவது ஒரு மின்சாரப் பட்டியலாகும். அத்துடன் திம்பினி கஸ்யாய பிரதேச செயலகம் (4 ஆம் மாடியில்) மாவட்டச் செயலகத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற நிறுவனம் என்பதால் வருடாந்த வரவு செவு மதிப்பீட்டில் மின்சாரம் மற்றும் நீர் (255-01-02-00-1403) இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்படாதிருந்ததுடன் மாவட்டச் செயலக மின்சார மற்றும் நீர் செலவு விடயத்தில் (255-01-01-00-1403) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கு உரிய நூற்றுக்கு 21 வீதமான | செலவினங் களைக் கணக்கிடும் போது மாவட்டச் செயலகத்திற்கு மற்றும் பிரதேசச் செயலகத்திற்கு உரிய செலவுகள் பிழையின்றி சதவீதமாகக் கணக்கிடப்பட்டு கணக்குகளில் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதன் பிரகாரம் வருடாந்த மின் கட்டணமான ரூபா 47,288,060 இல் மாவட்டச் செயலகத்திற்கு நூற்றுக்கு 32 வீதமான அளவே உரித்துடையது. அதாவது ரூபா 15,132,179 மட்டுமே ஆகும். ஆயினும், 2020 ஆம் வருடக் கட்டணச் செலவுகளில் அதிகமாகக் கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவுகள் செய்யப்பட்டது. அத்துடன் மொத்தப் பட்டியலில் தேர்தல் திணைக்களத்திற்கான ஒரு மாடிக்குரிய நூற்றுக்கு 05 வீதம் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிற்கான 08 ஆம் மாடிக்காக நூற்றுக்கு 42 வீதம் வேறுவேறாக அறவிடப்படுகின்றது. | |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரியின் சொத்துக்கள் கணக்குக் கூற்று (SA-82) இன் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,430,256,825 என்பதுடன் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அம்மிகுதி ரூபா 8,430,427,962 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது. பிரதேசச் செயலகங்கள் பலவற்றின் ரூபா 171,137 பெறுமதியான நிதியல்லாச் சொத்துக்கள், திறைசேரிச் சொத்துக்கள் கணக்குகள் கூற்றில் உள்ளடக்கப்படாமையே இதற்கு காரணமென்று கண்டறியப்பட்டது. | இவ்வேறுபாடு கண்டறியப்பட்டுள்ளதுடன் 2020 திறைசேரிக் கணக்கு அறிக்கை திருத்தப்படுவதற்கு காலம் போதாமையால் இவ்வேறுபாடு காணப்பட்டதாகவும் இவ்வேறுபாட்டை திருத்துவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதியாண்டின் திசெம்பர் 31 இல் ஆரம்ப நிதிக் கூற்று தயாரிப்பதற்கான அனைத்து தகவல்களும் பிரதேசச் செயலகங்களிலிருந்து கோரப்படல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 8,149,483,260 ஆன நிதியல்லாச் சொத்துக்கள், மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் (ஏசீஏ-6) 2020 சனவரி 01 இல் ஆரம்ப மிகுதியாக முன்கொண்டு | கட்டிடம் பொறி, உபகரண மிகுதிக்கான நிதி நிலைமைக் கூற்றின் மிகுதிகள் மற்றும் திறைசேரிக் கணக்கு அறிக்கையின் மிகுதிகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டமை சிகாஸ் வேலைத்திட்டத்தின் ஆரம்ப மிகுதி உள்ளடக்கப்படுவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை | நிதிசாராச் சொத்துக்களின் பெறுமதியில் ஆரம்ப மிகுதிகள் சரியாக முன் கொண்டு வரப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரப்படுவதற்காக அத்திகதியில் குறிப்பிடப்பட்டிருந்த ஆரம்ப மிகுதி ரூபா 3,514,457,904 ஆகும். இதன் பிரகாரம் முன்னைய வருடத்தின் இறுதி மிகுதி, மீளாய்வாண்டின் ஆரம்ப மிகுதியாக முன்கொண்டு வரப்பட்டபோது ரூபா 4,635,025,356 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் இது இறுதி மிகுதியில் தாக்கம் விளைவித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டமை என்பதுடன் அதை திருத்துவதற்காக சிகாஸ் வேலைத்திட்டத்தின் நடப்பாண்டிற்கான ஆரம்ப மிகுதியைக் குறிப்பிடுவதற்காக ஒரு தனி வரிசையை உள்ளடக்குவதன் மூலம் செய்ய வேண்டியுள்ள போதிலும் அது அரச கணக்குகள் திணைக்களத்தினால் சிகாஸ் வேலைத்திட்டம் நாளதுவரையாக்கப்படுதலின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதுடன் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நடவடிக்கை ஒன்றாகும். | |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகப் புத்தகங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் மிகுதி ரூபா 208,611,369 என்பதுடன் திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அம்மிகுதி ரூபா 209,560,063 ஆகும். இதற்குக் காரணம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 08 வருட காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படாத ரூபா 1,150,694 ஆன இணக்கப்படாத வரவு மிகுதி மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 202,000 ஆன தவறான செலவு மிகுதியொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ரூபா 1,150,694 ஆன இணக்கப்படாத வரவு மிகுதி தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையைச் செயற்படுத்துவதற்காக குறித்த அறிக்கை உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கும் அரச கணக்குகள் குழுச் சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் இந்த நிகழ்விற்குப் பொறுப்பானவர் தற்போது அரச சேவையில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மற்றும் செலவுத் தலைப்பிற்கு செய்யப்பட்ட ரூபா 202,000 தவறான செலவு வைத்தல் 2021 மார்ச் மாதம் திறைசேரி அச்சீட்டுக் கூற்றுக்களூடாக திருத்தம் செய்யப்பட்டது. | திறைசேரிப் புத்தகம் மற்றும் திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் வேறுபாட்டிற்கான இணக்கப்படாத மிகுதிகள் விரைவில் தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2020 இன் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் சான்றுப்படுத்தப்பட்ட இறுதி திறைசேரிக் கணக்குகள் கூற்றின் தகவல்களின் பிரகாரம் மட்டுமே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமென விசேடமாக கூறப்படுகின்றது. அதன் பிரகாரம் திறைசேரிக் கணக்குகள் கூற்று (SA-50) இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பணப் பெறுவனவு ரூபா 57,766,931 மற்றும் அம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 71,823,577 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அவை முறையேம ரூபா 41,483,888 மற்றும் ரூபா 71,277,334 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் கட்டுநிதி மிகுதி ரூபா 10,048,229,796 என்பதுடன் தவறான தரவுகள் கணக்கிடப்பட்ட காரணத்தினால் கட்டுநிதி மிகுதி ரூபா 10,032,492,996 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | நாட்பட்ட வழுவொன்றின் காரணமாக கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு முற்பணப் பெறுவனவுகள் கணக்கின் வேறுபாடு ரூபா 16,283,043.76 மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் கணக்கின் வேறுபாடான ரூபா 546,243 ஆன தொகை உள்ளடக்கப்பட்டு கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் உம்மால் குறிப்பிட்டுக் காட்டியவாறு நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் பெறுவனவு ரூபா 57,766,931 உம் கொடுப்பனவு ரூபா 71,823,577 உம் ஆக குறிப்பிடப்பட்டு 2020 திசெம்பர் 31 இல் கட்டுநிதி கணக்கின் மிகுதி ரூபா 10,048,229,797 ஆக வேறுபட்டது. அதன் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கிற்கு முற்பணப் பெறுவனவுகள் கணக்கின் வேறுபாடான ரூபா 16,283,043.76 மற்றும் முற்பணக் கொடுப்பனவுக் கணக்கின் வேறுபாடான ரூபா 546,243 ஆன தொகை சீராக்கம் செய்யப்பட்டு கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு மிகுதி ரூபா 10,048,229,797 ஆக வேறுபட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 வைப்பு கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிக் கூற்று (SA-30) பிரகாரம் கணக்கு மிகுதி ரூபா 702,411,998 என்பதுடன் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 712,411,998 ஆகக் காட்டப்பட்டிருந்தது. இவ்வேறுபாட்டிற்கு வைப்புக் கணக்கில் இருந்த ரூபா 10,000,000 ஆன தீர்க்கப்படாத வரவு மிகுதியே காரணம் ஆகும். | திறைசேரிக் கூற்றின் பிரகாரம் மற்றும் மாவட்ட செயலகத்தின் புத்தகங்களின் பிரகாரம் வைப்பு மிகுதிகளுக்கிடையே காணப்பட்ட வேறுபாடு ரூபா 10,000,000 ஆக இருந்ததுடன் வைப்புக் கணக்கில் காணப்பட்ட இவ்வேறுபாட்டிற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் பெறப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வரவு மிகுதி தீர்க்கப்பட்டு இவ் வேறுபாடு வைப்புக் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு திகைக்களப் புத்தகத்தின் பிரகாரம் முறையே ரூபா 91,327,949 மற்றும் ரூபா 106,730,345 என்பதுடன் திறைசேரிக் கூற்றின் (SA-82) பிரகாரம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 57,766,931 மற்றும் ரூபா 71,823,577 ஆகும். அதன் பிரகாரம் திணைக்களப் புத்தகம் மற்றும் திறைசேரிக் கூற்று (SA-82) பிரகாரம் வேறுபாடு ரூபா 34,906,768 மற்றும் ரூபா 33,561,018 கட்டுநிதிச் சீராக்கல் கணக்கிற்கு சீராக்குவதற்காக ரூபா 35,453,011 மற்றும் ரூபா 29,844,062 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் வழிகாட்டியின் பிரகாரம் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அக்கணக்கு தயாரிக்கப்பட்ட போது திணைக்களப் புத்தகங்களில் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கணக்கிடப்படாத ஆனால் திறைசேரி அச்சீட்டுக் கூற்றில் வேறு அமைச்சுக்கள், திணைக்களத்தினால் செய்யப்பட்ட வரவு மற்றும் செலவு குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கட்டுநிதிச் சீராக்கல் கணக்கு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்க்ள மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டச் செயலகத்தின் மின்சார மற்றும் நீர் மீண்டெழும் செலவு விடயங்களுக்கான ஒதுக்கங்களை விஞ்சியதாக ரூபா 1,698,456 ஆன பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். 2020 ஆம் ஆண்டில் கணக்கினூடாக ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 255-1-1-0-1403 மாவட்டச் செயலக மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்காகப் போதியளவு ஒதுக்கங்கள் வழங்கப்படாமையால் மற்றும் மாவட்ட செயலக தொகுதியின் நிறுவப்பட்டுள்ள ஏனைய பிரிவுகளில் குறிப்பிட்ட தினத்தில் 1403 இற்கான ஒதுக்கங்கள் வழங்கப்படாமையால் இவ்வாறு ஒதுக்கங்களை விஞ்சியதாகப் பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 94 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவு விடயங்களில் வருடாந்த ஒதுக்கங்களை விஞ்சியதாக பொறுப்புக் களுக்கு உடன்படா திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல 02/2020 இன் 10.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட வகையில் அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டி இல 06 இன் 3.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு iii) காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் திறைசேரியினால் ஒவ்வொரு செலவு விடயங்களுக்கு வழங்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (SA-92) பொறுப்புக்களின் | இப்பொறுப்புக்கள் மிகுதியில் கூடுதலான பெறுமதியொன்று உள்ளடக்கப்பட்டு மின்சாரம் மற்றும் நீர் செலவு விடயத்தின் ஒதுக்கத்தை விஞ்சாத காரணததினால் இந்நிலைமை ஏற்பட்டது. இதற்கான காரணம் 1403 மின்சார செலவு விடயத்திற்கு 2020 இடைக்காலக் கணக்கில் போதியளவு ஒதுக்கங்கள் வழங்கப்படாமை மற்றும் மாவட்டச் செயலகத் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள ஏனைய பிரிவுகளால் குறித்த திகதியில் ஒதுக்கங்கள் பெறப்படாமை. | திறைசேரிப் புத்தகம் மற்றும் திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் வேறுபாடு கண்டறியப் பட்டு திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். |

மிகுதியுடன் இணங்கியிருத்தல் வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) பிரகாரம் பொறுப்புக்கள் மிகுதி ரூபா 6,414,969 மற்றும் திறைசேரிக் கூற்று (SA-92) பிரகாம் ரூபா 1,043,453 ஆகவும் ரூபா 5,371,516 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.2 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொது வைப்பு (பழைய) கணக்கில் 2020 திசெம்பர் 31 இல் ரூபா 10,000,000 ஆன வரவு மீதியானது 13 வருடங்களுக்கும் மேலாக காணப்பட்டபோதிலும் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய மற்றும் 269/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.7 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்கப்படுவதற்கு முடியாதிருந்தது. | பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 10 மில்லியன் வரவு மிகுதி நி.பி 109 இன் பிரகாரம் புத்தகத்திலிருந்து நீக்குவதற்காக பொது 285 படிவம் முறையாகத் தயாரிக்கப்பட்டு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு 2020 நவம்பர் 16 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் குறிப்பிட்ட படிவம் 2020 நவம்பர் 24 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 2021 மே 04 இல் இது தொடர்பாக நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டதுடன் அதன் பிரகாரம் எமது கட்டுப்பாட்டின் கீழ் இது தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டிருந்தது. | இந்த வரவு மிகுதி தீர்க்கப் படுவதற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நட்டஈடு வழங்கும் வைப்புக் கணக்கில் பிரதேசச் செயலகங்கள் 11 இற்குரிய 05 வருடங்கள் அல்லது அதற்கு அதிக காலமாக காணப்படுகின்ற வைப்புக்களின் பெறுமதி ரூபா 104,054,293 ஆகும். நட்டஈடு வழங்கப்படுவதற்கு முன்னர் ஏற்கனவே காணியைக் கைப்பற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் விரைவில் முடிக்கப்பட்டு காணிக்கான நட்டஈடு வழங்கப்பட்டு அவ்வைப்பு மிகுதி தீர்க்கப்படுவதற்கான போதியளவு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த அனைத்து நட்டஈடு வைப்பு, காணி நட்டஈடு வைப்புக்களுக்கிடையே கொலன்னாவ ரூபா 5,778,768 ஆன நட்டஈடு வைப்புத் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் காணப்படுவதுடன் றத்மலான - ரூபா 8,163,249 மற்றும் ஹோமாகம - ரூபா 2,414,884.15 ஆன நட்டஈடு வைப்புத் தொடர்பாக காணியைக் கைப்பற்றும் நடவடிக்கை முடிவுறாது காணப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர ரூபா 16,180,989 ஆன நட்டஈடு வைப்புத் தொடர்பாக மதிப்பீட்டறிக்கை வழங்கப்படாமையால் அவ்வைப்பு தேக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அம்மிகுதியை விட மீதமாகவுள்ள அனைத்து நட்டஈடு வைப்பு மிகுதிகளை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நி.பி 571 இன் பிரகாரம் காணி நட்டஈடு அதிகபட்சம் 10 வருடங்களுக்கு தேக்கி வைப்பதற்கு முடியுமாக இருப்பதுடன் இந்த அனைத்து வைப்புக்களும் 10 வருடங்களுக்கு மேற்பட்டமை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | வைப்புக்களை விடுவிப்பதற்காக காணப்படும் சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்க்கப்படாத வைப்புக்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 570(அ) காணி நட்டஈடு வைப்பிலிட்ட திகதியிலிரந்து 10 வருடங்கள் கடந்த பின்னர் பழைய வைப்புக்களாக அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திம்பிரிகஸ்யாய பிரதேசச் செயலகத்திற்கு உரித்தான 11 வைப்புக்களான ரூபா 3,962,668 | காணி வைப்புக்கள் 11 தொடர்பாக இற்றை வரையில் குறிப்பிட்ட நிறுவனங்களில் செயற்திட்ட முன்னேற்றம் விசாரிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அவ்வைப்புக்களை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு திம்பிரிகஸ்யாய பிரதேசச் செயலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தீர்க்கப்படாத வைப்புக்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுவதுடன் 2020 மார்ச் 31 வரையில் அம்மிகுதியை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஈ) | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் நிலமெதுர கட்டிடத்தில் அந்த அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற மாடிக்காக 2020 சனவரியிலிருந்து நவம்பர் வரையான மின்சாரம் மற்றும் நீர் பட்டியல் செலவுகள் மீள் செலுத்தவதற்காக 2020 திசெம்பர் 31 இல் ரூபா 9,137,610 ஆனது மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையானது செலவுகளை மீளச் செலுத்துவதற்காக நிதியங்கள் பெறுவனவு வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2021 மார்ச் 24 வரையில் 2020 ஆம் ஆண்டின் மின்சாரச் செலவு கணக்கில் அறவிடப்படாமையால் பொது வைப்புக் கணக்கு மிகுதியொன்றாக காட்டப்பட்டிருந்தது. | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் நிலமெதுர கட்டிடத்தில் அமைச்சிற்கு உரித்தான மாடிக்காக மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களுக்காக ரூபா 9,137,609.80 மாவட்டச் செயலகத்திற்கு 2020 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் அச்செலவு மீள் செலுத்தும் கணக்கிற்கு (6000-00-00-20-00-06) செலவு வைக்கப்பட்டதாகவும் இற்றைவரையில் மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்கான கொடுப்பனவு செய்வதற்கு போதியளவான பணம் மற்றும் ஒதுக்கங்கள் காணப்பட்ட போதிலும் அமைச்சினால் பெறப்பட்டு பயன்படுத்தப்படாத தொகை எதிர்வரும் மாதங்களுக்கான பட்டியல்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படும். | மாவட்டச் செயலகத்திற் கான அறிக்கையிடப்பட வேண்டிய காலப் பகுதிக்கான செலவுகள் பிழையின்றி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதால் மீளாய்வாண்டின் செலவுகளைத் தீர்க்கப்படுவதற்கு வழங்கப்பட்ட பணம் அப் பணிக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 2.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சேவை நிலைய மாற்றங்கள், மரணித்தல் ஓய்வூதியம் பெற்றுச் செல்லல், வேலையிலிருந்து இடைநிறுத்தல் மற்றும் சேவையிலிருந்து விலகுதல் போன்ற காரணங்களினால் தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்கள் மற்றும் 20 | நிலுவை மிகுதியை அறவிடுதலில் பிரதான தாக்கமளிப்பது, குறிப்பிட்ட கடனாளியின் பிணையொன்று அல்லது பிணையாளியொன்று இல்லாதிருந்தமை 10 வருடங்கள் முழுமை பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு | குறிப்பிட்ட உத்தியோகத்தர் களின் நிறுவனக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மிகுதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,389,130 ஆனது 2021 ஏப்ரல் 30 ஆந்திகதி வரையில் காணப்பட்டதுடன் அம்மிகுதி 02 வருடங்களுக்கோ அல்லது அதற்கும் அதிகமான காலமாக அறவிடப்பட வேண்டி உள்ளது. | பிணையின்றிக் கடன் வழங்கும் அரச கொள்கையின் அடிப்படையில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றன. வெளிக் காரணங்களினால் ஏற்பட்ட நிலுவைக் கடன் மிகுதியை அறவிடுவதற்கு எம்மால் அனைத்து நிறுவன மற்றும் சட்ட ரீதியான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 2.4 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மஹரகம பிரதேச செயலகத்திற்கு உரித்தான பிரதேசத்தில் உடஹமுல்ல கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 2014 இலிருந்து 2018 வருடம் வரையிலான காலப்பகுதியில் மரணித்த முதியோர் ஐவரின் ரூபா 330,200 ஆன முதியோர் நிவாரண தொகையொன்று அவர்கள் மரணித்த பின்னர் முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்கோ அல்லது அக்கொடுப்பனவிற்கான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கோ 2021 மே மாதம் வரையில் முடியாதிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பிரகாரம் 05 மரணித்த பயனாளிகளின் முதியோர் நிவாரணம், அவர்கள் மரணித்த பிறகும் செலுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு இது தொடர்பாக புலனாய்வொன்று திணைக்கள மட்டத்தில் நடத்தப்பட்டு, அறவிடப்படவேண்டிய ரூபா 330,200 ஆன தொகை பிரதேச செயலகம், மஹரகம என்னும் பெயருக்கு செலுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எனது இலக்கம் DIST.CMB/ACC 06/GEN/01/2020 ஆன 2020 செப்டம்பர் 28 ஆந்திகதிய கடிதமொன்று தபாலதிபருக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக குறித்த புலனாய்விற்குத் தேவையான தகவல்கள் மற்றும் பதிவேடுகளை வழங்குமாறு குறிப்பிட்டு நிர்வாகம் (புலனாய்வு), தபால் திணைக்களத்தினால் எமக்கு 2021 ஏப்ரல் 19 ஆந்திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டிருந்த தகவல்கள் | பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த உத்தியோகத் தருக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி இழப்புகளை நிரப்புவதற்கு நடவடிக்கை விரைவில் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விரைவில் தபால் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு 2021 மே 19 ஆந்திகதிய கடிதம் மூலம் மஹரகம பிரதேச செயலகத்திற்கு என்னால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | கணிப்பிடுதல் மற்றும் மொழிபெயர்ப்பின் போதான தவறு, ஓய்வூதியம் இரு தடவைகள் செலுத்தப்பட்டமை, ஓய்வூதியம் பெறுபவர் மரணித்த பிறகும் அது உறுதிப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் ஓய்வூதியம் செலுத்தப்பட்டமை, படையினரின் ஓய்வூதியத்திற்காக இரு தடவைகள் வாழ்க்கைச்செலவுப்படிகள் செலுத்தப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களினால் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேசசெயலாளர் அலுவலகங்களிற்கு உரிய பிரதேசங்களில் ஓய்வூதியம் பெறுவோருக்கு முறையற்ற விதத்தில் மற்றும் முறைகேடுகளுடன் ஓய்வூதியம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதி வரையில் 198 ஓய்வூதியக்காரருக்கு இவ்வாறு அதிகமாகக்கொடுக்கப்பட்ட தாக ஆனால் மேலும் அறவிட வேண்டிக் காணப்படுகின்ற ஓய்வூதியப் பெறுமதி ரூபா 23,958,120 என்பதுடன் அத்தொகையில் ரூபா 22,347,228 ஆனது 05 வருடங்களுக்கு குறைந்த காலப்பகுதி மற்றும் ரூபா 1,610,892 ஆனது 5-10 | 2020 சனவரி 01 இல் மிகுதி ரூபா 24,676,638.77 என்பதுடன் 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரையில் அறிக்கையிடப்பட்ட மேலதிக கொடுப்பனவானது ரூபா 11,605,983.06 மற்றும் அக்காலப்பகுதியில் அறவிடப்பட்ட தொகை ரூபா 12,234,501.12 ஆகவும் 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மிகுதி ரூபா 23,958,120.71 ஆகும். வருட ஆரம்பத்தில் காணப்பட்ட மிகுதியில் ஒரு பகுதி அறவிடப்பட்டிருந்ததுடன் அம் மிகுதிக்கு மேலதிகமாகச் செலுத்தப்படடவை வருடத்திற்குள் சேர்க்கப்பட்டு முன்கொண்டு வரப்படும். இந்நிலைமைக்கு ஓய்வூதியத் திருத்தங்கள், மருத்துவக் காரணங்களினால் முன்னைய திகதிகளில் செலுத்தப்பட்ட ஓய்வூதியங்கள் மற்றும் 55 வயது வரையில் சம்பளம் வழங்கப்படுகின்ற முப்படையினருக்கான ஓய்வூதியம் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டமை, ஓய்வூதியக்காரர்களின் மரணித்த திகதி மற்றும் அப்பிரதேச செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையே ஏற்பட்ட மேலதிகக் கொடுப்பனவு (பெரும்பாலும் ATM இயந்திரம் மூலம் பணம் பெறப்படல்), வாழ்க்கைச்செலவு மேலதிகமாக வழங்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டமை (குறிப்பாக இராணுவ இயலாமை மற்றும் சார்புக் கொடுப்பனவுகளில்), | ஓய்வூதியம் சரியாகவும் மற்றும் முறையாகவும் கணக்கிடப்பட்டு அவை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஓய்வூதியம் வழங்கப்படுவதை யும் ஓய்வூதியம் பெறுபவர்களில் உயிருடனுள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கு மட்டுமே ஓய்வூதியத்தை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும். |

வருடங்களுக்கு இடையிலுமான காலமாக அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது.

சம்பளத்திருத்தங்கள் மற்றும் சம்பள முரண்பாடு கணக்கிடும் போது ஏற்பட்ட தவறுகள், ஓய்வூதியக்காரர்களுக்கு ஒன்றிணைந்தல்லாத சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை என்பன இதற்கான காரணங்களாகும். அத்துடன் ஓய்வூதியக்காரரின் மரணம், தற்காலிகமாகச் சம்பளம் இடைநிறுத்தப்படுதல் மற்றும் உறவினர்கள் பணம் செலுத்தத் தவறியமை போன்ற விடயங்களினால் மீண்டும் அறவிடமுடியாத பணத்தின் பெறுமதி மேற்கூறப்பட்ட மிகுதியினுள் அடங்கியுள்ளது. இந்த மேலதிகக் கொடுப்பனவு குறைத்தல் தொடர்பாக எடுக்கக்கூடிய முடிவுகள் தொடர்பானவை பெரும்பாலான பிரதேச செயலகங்களில் கணக்காளர்களின் கீழே, ஓய்வூதியப் பிரிவில் காணப்படுவதுடன் அவர்களது கடமையில் ஓய்வூதியம் தொடர்பாக கவனங் கோரப்படுதல் சாத்தியமற்றது என்பதால். ஓய்வூதியத்திற்காக வேறு கணக்காளர் ஒருவர் நியமிக்குமாறு விடயங்களைத் தெளிவுபடுத்தி பல சந்தர்ப்பங்களில் ஓய்வூதியப் பணியாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் இவற்றைக் குறிப்பிட்டு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டு வருவதுடன் ஓய்வூதிய அதிகாரிகள், கணக்காளர்கள் மற்றும் தற்போது காணப்படுகின்ற குறைந்தளவில் பயிற்றப்பட்ட அதிகாரிகளை ஈடுபடுத்துவதன் மூலம் இந்நிலைமையை குறைப்பதற்கு எம்மால் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 இன் நிதிக்கூற்றுக்களில் மாவட்ட செயலகத்தினால் ஏனைய அமைச்சுக்களின் செலவு அறிக்கையின் பிரகாரம் செலவு விடய விபரம் 104-2-6-6-2506 மற்றும் 102-2-7-6-2506 இன் கீழ் முறையே ரூபா 300,744,525 மற்றும் ரூபா 617,343,000 ஆன மொத்தம் ரூபா 918,087,525 ஆன செலவுகள் கணக்கிடப்பட்டிருந்தன. இது சூப்பர் கிராம செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட கிராம உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டத்திற் குரியதாகும். அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் 1173 இற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கங்கள் ரூபா 1052 மில்லியன் ஆகும். 2020 திசெம்பர் 31 இல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அச்செயற்றிட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 589 மில்லியன் மற்றும் கையிலிருந்த பற்றுச்சீட்டுக்கள் ரூபா 408.8 மில்லியன் ஆகும். கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 209 அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கங்கள் ரூபா 137 மில்லியன் ஆகும். இச்செயற்றிட்டத்திற்காக 2020 திசெம்பர் 31 வரையில் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 121 மில்லியன் செலவுகள் மற்றும் கையிலிருந்த பற்றுச்சீட்டுக்கள் ரூபா 0.59 மில்லியன் என்பது அவதானிக்கப்பட்டதுடன் 10 செயற்றிட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | சுப்பர் கிராம செயற்றிட்டத்திற்காக 2020 ஆம் வருடத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 1051.71 மில்லியன் என்பதுடன் அதில் அனுமதிக்கப்பட்டிருந்தது அதற்கும் குறைவான தொகையாக இருந்ததுடன் அந்த அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 2020 திசெம்பர் 31 இல் வேலை முடிக்கப்பட்டிருந்த 1173 செயற்றிடங்களுக்காக ரூபா 588.96 மில்லியன் ஒதுக்கங்கள் எமக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த அனைத்து செயற்றிடங்களுக்காகவும் 2020 திசெம்பர் 31 வரை கொடுப்பனவுகள் முடிவடைந்திருந்தது.<br><br>நிதி அமைச்சின் செயலாளரின் இலக்கம் MFEPD/PLAN/RD2020 மற்றும் 2020 சனவரி 28 ஆந்திகதிய கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட செயற்றிட்டம் முடிவுற்று அச்செயற்றிட்ட செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் குறிப்பிட்ட செயற்றிடத்திற்கான ஒதுக்கங்கள் விடுவிக்கப்படுவதாக நிதி அமைச்சின் செயலாளரின் மேற்குறிப்பிட்ட கடிதத்தின் அறிவுறுத்தலின் படி செயற்படுதல் பொருத்தமானதென கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் செயற்றிட்டம் | அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பிரகாரம் செயற்றிடங்களை செயற்படுத்தி அதற்கான கொடுப்பனவு களை மீளாய் வாண்டிற்குள் முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 05/2020 இன் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் எந்த ஒரு அமைச்சு, திணைக்களம், அல்லது மாவட்டச் செயலகத்தினால் ஏனைய அரச அல்லது தனிப்பட்ட நிறுவனத்திடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொண்டால் அதற்கான பற்றுச்சீட்டுக்கள் 2020 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் தீர்க்கப்பட்டு கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய அபிவிருத்தி செயற்றிடங்களுக்குரிய ரூபா 409.39 மில்லியன் பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் கையில் காணப்பட்டன. | முடிவடைந்து 2020 திசெம்பர் 31 வரையில் ஒதுக்கங்கள் பெறப்படாத பெறுமதியே எமது கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களாகும். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்டச்செயலகத் தலைவரினால் தமது நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டை செயற்படுத்துவதற்காக மூன்றாண்டு நடுத்தரகால வரவு செலவுத் திட்டக் கட்டமைப்பிற்குள் நிதியாண்டிற்காக உள்ளடங்க வேண்டிய அனைத்து விடயங்கள் மற்றும் தேவைப்பாடுகளை உள்ளடக்கியதாக வருடாந்த | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரச நிதிச்ச சுற்றறிக்கையில் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அது கட்டுப்பாட்டுக்கு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற் கான |

| | | |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக முறையான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடந்தச் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் நிறுவகத்தின் 31 ஆம் இலக்கத்திற்காக இனங்காணப்பட்ட 154 செயலாற்றுக் குறிகாட்டிகளில் செயற்றிறன் முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் 33 செயலாற்றுக் குறிகாட்டிகளுக்கான செயற்றிறன் முன்னேற்றம் நூற்றுக்கு 75 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | எதிர் பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வருடாந்தச் செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந்திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்தச் செயலாற்றல் சுற்றறிக்கையின் வரைவு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொரோனா தோற்று நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கைகளை மேற்கொண்டமையால் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் சுற்றறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப் படுவதற்கு தாமதமாகியதுடன் தற்போது மும்மொழிகளிலும் செயலாற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் அதை சமர்ப்பிக்க முடியும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 வரையில் கொழும்பு மாவட்டச் செயலகம் தீப்பிடித்து நட்டத்துக்குள்ளாகி 08 வருடங்கள் மற்றும் மகரகம பிரதேச செயலகம் தீப்பிடித்தலில் ஏற்பட்ட நட்டத்திற்கு 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்து இருந்தது. ஆனால் அந்நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது பதிவளிப்பதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுக்கப்படாமையுடன் இழப்புக்கள் மற்றும் நட்டங்களின் பெறுமதி முறையே ரூபா 92,606,688 மற்றும் ரூபா 629,492 ஆக மொத்தம் ரூபா 93,231,180 ஆகும். 08 வருடங்கள் கழிந்த பின்னரும் இது தொடர்பான பொலிஸ் விசாரணை முடிவடையாதபடியால் இந் நட்டங்களை அறவிடல் அல்லது பதிவழித்தல் போன்ற மேற்கொள்ளப்படாது காணப்பட்டது. | மாவட்டச் செயலகம் மற்றும் மகரகம பிரதேசச் செயலகம் என்பன தீப்பிடித்தல் சம்பந்தமான பொலிஸ் விசாரணைகள் இன்னும் முடிவடையாமையால் கோவைகளின் நடவடிக்கைகளை முடிப்பதற்கு அறிவுறுத்தி 2021 சனவரி 15 ஆந் திகதி என்னால் கடிதமொன்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான விசாரணைகளை விரைவில் நடாத்தி அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அல்லது ஊழியர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் இலக்கம் 101 மற்றும் 156 பிரமாணங்களின் பிரகாரம் அதற்குப் பொறுப்பான தரப்பினர்களிட மிருந்து மீட்பதற்கும் மற்றும் விபத்திற்கான நட்டங்களைத் தீர்ப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகமொன்று நிறுவப்படுதவ்றகு முன்னர் பிரதேசச் செயலகத் தொகுதியின் கீழ்வரும் பிரிவுகள் மற்றும் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு மும்மொழிகளிலும் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும், முறையே 1999 மார்ச் 03 ஆந் திகதி மற்றும் 1999 மே 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட திம்பிரிகஸ்யாய மற்றும் பாதுக்க பிரதேசச் செயலகங்களுக்கான எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு தொகுதிகள் நிறுவப்படுதலுக்கான வர்த்தமானி அறிவித்தல் 2021 மே 31 வரையில் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | தற்போது நிர்வாக எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்படுவதில்லை. அனைத்துப் பிரதேசச் செயலகங்களின் வர்த்தமானி தொடர்பான எனது இலக்கம் DIST.CMB/AD/06/01/14 மற்றும் 2021 மே 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பாதுக்கை மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேசச் செயலகங்களின் வர்த்தமானி அறிவிப்புத் தொடர்பாக மும்மொழி வர்த்தமானிப் படிவங்கள் தற்போது உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பிரதேசச் செயலகம் நிறுவப்படுத்து வதற்கு முன்னர் அச்செயலகத்திற்குரிய தொகுதிகளுக் கான பிரிவுகள் மற்றும் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு மும் மொழிகளிலும் வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மஹரகம நகர அபிவிருத்திக்காகக் காணிகளைச் சுவீகரிப்பதன் கீழ் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும், 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய மதிப்பீட்டாளர் திணைக்களத்தின் இழப்பீட்டுத் தொகையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 112 மில்லியன் போக்குவரத்துச் சபைக்கு செலுத்தப்படவில்லை. | இதற்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 112 மில்லியன் நிதி ஒதுக்கங்கள் பொதுத் திறைசேரியிடம் கோரப்பட்டிருப்பதுடன் அது கிடைத்த பின்னர் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட ஒதுக்கங்கள் பெறப்பட்டு இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சில வருடங்களுக்கு முன்னர் மஹரகம பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய 06 மாடிக்கட்டிடத்திற்கு 04 மின் தூக்கிகள் நிர்மாணிக்கப்படவிருந்த போதிலும், 2021 மே 31 வரையில் அம்மின் தூக்கிகள் நிர்மாணிக்கப் படவில்லை. | 2021 நிதி ஒதுக்கங்களின் கீழ் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் அது மஹரகம பிரதேசச் செயலகத்திற்கு 2021 மார்ச் 16 ஆந் திகதி வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது மாவட்ட பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுகையொன்று என்பதால் அது தொடர்பாக மாவட்ட பொறியியலாளர் பிரிவின் மூலம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட மின் தூக்கிகள் விரைவில் நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கொழும்பு, தெஹிவளை, கொலன்னாவ, கெஸ்பேவ, மற்றும் ஹோமகம போன்ற பிரதேசச் செயலகங்கள் இயங்கி வருகின்ற காணிகளின் உரிமை அப்பிரதேசச் செயலகங்களுக்கு உரித்தானது உரிமையைக் கையேற்பதற்கு இற்றை வரையில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. உரிமை பிரதேசச் செயலகத்திற்கு சொந்தமற்ற இக்காணிகளில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக அப்பிரதேசச் செயலகங்களினால் அரச நிதி பெருமளவில் செலவிடப்பட்டிருந்தது. | கொழும்பு பிரதேசச செயலகக் காணி - அளவீட்டிற்கான உத்தரவு பெறப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், தெஹிவளை பிரதேசச் செயலக காணி தொடர்பாக மாவட்டப் பொறியியலாளர் பிரிவினால் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், கொலன்னாவ பிரதேச செயலக காணிகளை மூலக் கோவையொன்று இல்லாததால் புதிய கோவையொன்று ஆரம்பிக்கப்பட்டு காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கொலன்னாவ பிரதேசச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கெஸ்பேவ மற்றும் ஹோமாகம பிரதேசச் செயலக் காணிகள் அரசிற்குச் சொந்தமானவை என்பதால் அதன் பிரகாரம் குறிப்பிட்ட நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலும், தற்போது சுமார் ஒரு வருட காலமாக நிலவுகின்ற கொவிட் தொற்று நிலைமை காரணமாக அது தொடர்பாக முன்னுரிமையளித்து நடவடிக்கைகள் எடுப்பதற்கு | பிரதேசச் செயலகங்கள் நிறுவப்பட்டுள்ள காணிகளைச் சட்டபூர்வமாகக் கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதேசச் செயலகங்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக இவ்வாறு காணியைக் கையேற்பதற்கான நடவடிக்கைகளுக்காக ஏனைய திணைக்களங்களின் உதவியைப் பெறுவதற்கு தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக காணிக் கையேற்பானது மந்த கதியில் இடம்பெற்று வருகின்ற போதிலும் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட ஓய்வூதியக் காரர்களின் ஓய்வூதியம் தொடர்பான 337 பழைய கடிதங்கள் அடங்கிய கோவைகள் காணாமல் போயுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இந்த கோவைகள் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் அல்லது ஓய்வூதியத் திணைக்களத்தில் காணப்படவில்லை. ஆனால் அந்த ஓய்வூதியக் காரர்களுக்கான தற்காலிக கோவைகள் மீண்டும் தயாரித்தல் சம்பந்தமாக பிரதேசச் செயலகத்தினால் 2021 மே 31 வரையில் முறையான மற்றும் போதுமானளவு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | காப்பகங்களை மீண்டும் பரீட்சித்த போது 6 கோவைகள் கிடைத்திருப்பதாகவும் கோவைகள் காணப்படாத ஓய்வூதியம் தொடர்பாக தற்காலிக கோவைகள் தயாரிப்பதற்காகத் தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு முறையாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுவதற்தற்கான அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | காணாமற் போன ஓய்வூதியங்களுக்குரிய பழைய கோவைகள் கண்டுபிடிப் பதற்கோ தற்காலிக கோவைகள் மீண்டும் தயாரிக்கப் படுவதற்கு முறையான மற்றும் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கோவைகளின் பாதுகாப்பு மற்றும் இருப்பை உறுதி செய்யும் கட்டுப்பாட்டு அமைப்புக்களை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2016 யூன் 21 ஆந் திகதிய CO/PDK/2010/679 ஆம் இலக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த பாதுக்கபிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள மினிமரு | அரச நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஏனைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதால் இந் | பிரதேசச் செயலகத்தினால் போதுமானளவு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது டன் ஆனால் குறிப்பிட்ட பணிகள் |

| | | |
|---|---|---|
| தொள பாதுகாப்பு வனத்தில், அரசின் காணி அதிகாரச்சட்டத்தின் காணிக் கட்டளை 228 இன் பிரகாரம் தொன பாதுகாப்பு வளம் வேறாகவும், தனிப்பட்டோரின் வசிப்பிட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் வேறாகவும், காட்டுகின்ற தடயங்களைத் தயாரிப்பதற்காக 2016/26 அளவைகள் அத்தியட்சகருக்கு (கொழும்பு) கோரிக்கை அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட அளவீட்டுக் கோரிக்கைக்காக 2019 மார்ச் 23, 2020 மார்ச் 13 மற்றும் 2020 திசெம்பர் 02 ஆந் திகதிகளில் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் இற்றைவரையில் தயாரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை மந்த நிலையில் காணப்படுவதுடன் இது தொடர்பாக நேரடியாகத் தலையிட்டு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதுக்க பிரதேசச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டள்ளது. | மேற்கொள்ளப்பட வில்லை என மாவட்டச் செயலாளரின் நேரடித் தலையீட்டுடன் அளவீட்டாளரு க்கு தெரிவித்து உரிய பணிகளைச் செய்ய வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளப்பட்டதாக 2020 ஆம் ஆண்டில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிரத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதின் செயலாற்றுகையின் கீழ் இலக்கம் 30 இற்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை 69 இன் கீழ் 106 இலக்குகளின் முன்னேற்றம் காட்டப்பட்டிருந்ததுடன் அதில் 15 இலக்குகளுக்கான முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்காக விரும்பிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1,424, உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 1,214, வெற்றிடங்களின் எண்ணிக்கை 210 அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 15 வீதமாகும். அபிவிருத்தி அலுவலகர் பதவிக்கான வெற்றிடங்கள் 10 உம் அரச முகாமைத்துவ சேவைக்கான பதவிகளில் வெற்றிடங்கள் 72 உம், கிராம சேவகர் பதவிகளில் வெற்றிடங்கள் 71 உம் இவற்றில் அங்குகின்றன. இப்பதவிகளின் வெற்றிடங்கள் காணப்படுதல் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறனை மோசமாக பாதிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | மாதாந்த ஊழியர் எண்ணிக்கை அறிக்கை மூலம் அனைத்து அலுவலகங்களிலும் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் புதிய ஊழியர்களின் ஆட்சேர்ப்பிற்கு இணங்க வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தற்போது அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட புதிய பயிற்சி பட்டதாரி அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு தொடர்ச்சியான திறமையான சேவையை பொது மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ச்சியான வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு தற்போதுள்ள பணியாளர்கள் போதுமானதாக இருந்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை மீளாய்வு செய்வதற்கு அல்லது உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |